**இயக்குநர், மோட்டார் வாகன பராமரிப்புத் துறை, சென்னை-42**
**அவர்களின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் : திரு. K. செந்தில்வேல், B.E.,**

**செ.மு.ஆ.எண். அ2 / 9009 / 2024** நாள் : **24.07.2024**

பொருள் : பணியமைப்பு - மோட்டார் வாகன பராமரிப்புத் துறை - அரசு மத்திய தானியங்கி பணிமனை, சென்னை - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இளநிலை உதவியாளராக தற்காலிகமாக பணியமர்த்தப்பட்டவரின் பணிக்காலத்தை இளநிலை உதவியாளர் பதவியில் முறைப்படுத்தி ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடித எண்.1962 / PSD-D2 / 2019, நாள் 25.08.2023
2. இயக்குநரது செ.மு.ஆணை எண்.அ2/ 10647 / 2023-8 நாள் 18.11.2023
3. பொது மேலாளர், அரசு மத்திய தானியங்கி பணிமனை, சென்னை அவர்களது கடித எண் அ1 / 8588 / 2023 நாள் 09.07.2024.

**********

பார்வை 1ல் காணும் கடிதம் வாயிலாக தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட திரு. க. கிருஷ்ணன், பார்வை 2ல் காணும் இயக்குநரின் செயல்முறை ஆணைகள் வாயிலாக மோட்டார் வாகன பராமரிப்புத் துறையில் சென்னை அரசு மத்திய தானியங்கி பணிமனையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணியமர்த்தப்பட்டதைத் தொடர்ந்து, அன்னார் இத்துறையில் **22.11.2023** முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தார்.

பார்வை 3ல் காணும் பொது மேலாளர், அரசு மத்திய தானியங்கி பணிமனை, சென்னை அவர்களின் கடிதம் வாயிலாக பெறப்பட்ட பரிந்துரையுடன் கூடிய பிரேரணையை தொடர்ந்தும் திரு. க. கிருஷ்ணன், இளநிலை உதவியாளர் பதவிக்குண்டான விதிகளின் தேவைகளை பெற்றுள்ளதாலும் அன்னாரது பணிக்காலம் இளநிலை உதவியாளர் பதவியில் அன்னார் அப்பதவியில் சேர்ந்த நாளான **22.11.2023** முற்பகல் முதல் முறைப்படுத்தப்பட்டு அந்நாள் முதல் அவர் இரண்டு ஆண்டு அலுவல் காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் இருப்பார் என்றும் அவ்வாறான தகுதிகாண் பருவ காலத்தை அன்னார் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

.....2

மேலும் பார்வை 1ல் காணும் அரசுப்பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில் தெரிவித்தவாறு "இந்த பணிவரன்முறை ஆணைகள் CIvil Services Examination - IV தெரிவுகள் தொடர்பாக சென்னை / மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் (WPs) தீர்ப்புக்கு உட்பட்டதாகும்" எனத் தெரிவிக்கப்படுகிறது.

( "The above regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Combined Civil Services Examination - IV")

(ஒம்) கொ. செந்தில்வேல்
இயக்குநர்

பெறுநர்
திரு. க. கிருஷ்ணன், இளநிலை உதவியாளர், அரசு மத்திய தானியங்கி பணிமனை, சென்னை
(உரிய வழிமுறையாக)

நகல்
பொது மேலாளர், அரசு மத்திய தானிங்கி பணிமனை, சென்னை-42

(திரு. க. கிருஷ்ணன், இளநிலை உதவியாளர், அரசு மத்திய தானியங்கி பணிமனை, சென்னை என்பவரது பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுவதுடன் அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புதலை உடன் இயக்குநர் அலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு பொது மேலாளர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்)

அ2 இ.கோப்பு

/ஆணைப்படி/

24/7/24.
துணை இயக்குநர்(நிர்வாகம்)

24/7/2024

மே.கு.எண்.அ1/8588/2023
நாள். 20.08.2024

பொது மேலாளர் அலுவலகம்,
அரசு மத்திய தானியங்கி பணிமனை,
வே ளச்சேரி, சென்னை-42.

நகல் சார்பு செய்யப்படுகிறது.

ஒம்/...மா.பழனிராஜன்
பொது மேலாளர்

பெறுநர்
திரு.க.கிருஷ்ணன், இளநிலை உதவியாளர்,
அரசு மத்திய தானியங்கி பணிமனை, சென்னை-42

//ஆணைப்படி//

அலுவலக மேலாளர்